RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 305 | நவம்பர்.5 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## திமுகவில் இணைந்தார் ஓபிஎஸ் ஆதரவாளர் மனோஜ் பாண்டியன்: அதிமுக மீது சரமாரி குற்றச்சாட்டு

சென்னை: நவ.5-

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் எம்எல்ஏ ஆக இருப்பவர் மனோஜ் பாண்டியன். அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர், ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளராக அறியப்படுகிறார்.

இந்நிலையில், நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். முன்னாள் சபாநாயகரும், அதிமுக மூத்த தலைவருமான மறைந்த பி.ஹெச் பாண்டியனின் மகன் மனோஜ் பாண்டியன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது, "திராவிட கொள்கைகளை பின்பற்றும் இயக்கமான திமுகவில் இணைந்துள்ளேன்; தமிழக உரிமைகளை அடகு வைக்காத தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்காதவர் எடப்பாடி பழனிசாமி. பாஜகவுடன் எந்தவொரு காலத்திலும் கூட்டணி வைக்க மாட்டேன் என்று கூறிவிட்டு தற்போது எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தார் என்று தெரியவில்லை. இது குறித்து இன்று வரை பதில் இல்லை. எந்த கொள்கைக்காக இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதோ, அது காற்றில் விடப்பட்டுள்ளது.

அதிமுகவை தோற்றுவித்த தலைவரும், அதற்குப் பின்னால் அந்த இயக்கத்தை பாதுகாத்து வளர்த்த ஜெயலலிதாவும் எந்தச் சூழ்நிலையிலும் அதிமுகவை யாருக்கும் அடகு வைக்கவில்லை. அவர்கள் காலத்தில் இருந்த அதிமுக தற்போது இல்லை. இன்றைய அதிமுக என்பது வேறு. மற்ற இயக்கத்தை நம்பி ,அவர்களின் சொல்படி நடக்கிறது. பாஜகவின் கிளைக் கழகமாக அதிமுக செயல்படுகிறது. இன்று மாலை 4 மணிக்கு எனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ய இருக்கிறேன்" என்று அவர் தெரிவித்தார்.

## பொதுக் கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறை வகுக்க அனைத்துக் கட்சி கூட்டம்: நவ.6ல் நடக்கிறது

சென்னை, நவ.05-

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது குறித்து ஆலோசிக்கும் வகையில் மூத்த அமைச்சர்கள் தலைமையில் நவ.6ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்குமாறு அரசியல் கட்சிகளுக்கு தலைமைச் செயலர் அழைப்பு விடுத்துள்ளார்.

கரூரில் கடந்த செப் .27ம் தேதிதவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக உச்சநீதிமன்ற உத்தரவின்படி சிபிஐவிசாரணை நடந்து வருகிறது. இதனை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையிலான குழு கண்காணிக்கவும் உத்தரவிட்டது. அதன்படி, தற்போதுசிபிஐ விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, அரசியல் கட்சித் தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்வுகள், பிரச்சாரக் கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை 10 நாகளில் வகுத்து சமர்ப்பிக்குமாறு அரசுக்கு உயர் நீதிமன்றம் கடந்த 27ம் தேதி உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், பொதுக்கூட்டம், ரோடு ஷோக்கள் நடத்துவதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க, முதல்வர் ஸ்டாலின் தலைமையில் சில நாட்களுக்கு முன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது தொடர்பாக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.சென்னை தலைமைச் செயலகத்தின் நாமக்கல் கவிஞர் மாளிகை 10வது தளத்தில் மூத்த அமைச்சர்கள் தலைமையில் நவ.6ம் தேதி காலை 10.30 மணிக்கு இக்கூட்டம் நடைபெறும். இதில் பங்கேற்று கருத்துகள், ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு கட்சித் தலைவர்களுக்கு தலைமைச் செயலர் நா.முருகானந்தம் கடிதம் அனுப்பியுள்ளார்.

## 10, 12ம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணையை வெளியிட்டார் அமைச்சர் அன்பில் மகேஸ்

சென்னை, நவ.05-

சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் செய்தியாளர்களை சந்தித்து வெளியிட்ட அறிவிப்பில், "2026ம் ஆண்டு மார்ச் 2ம் தேதி முதல் மார்ச் 26ம் தேதி வரை 12ம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறும். பிளஸ் 2 செய்முறை தேர்வுகள் பிப்ரவரி 9 முதல் பிப்ரவரி 14ம் தேதி வரை நடைபெறும். மே.8 ம் தேதி பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியாகும்.

மார்ச் 3ம் தேதி முதல் மார்ச் 27ம் தேதி வரை பிளஸ் 1 தேர்வுகள் நடைபெறும். 11ம் வகுப்பில் தவறிய மாணவர்களுக்கு மார்ச் 3ம் தேதி முதல் மறுதேர்வு நடைபெறும். 11ம் வகுப்புக்கான செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 21 வரை நடைபெறுகிறது.

மார்ச் 11ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும். 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 20ம் தேதி வெளியாகிறது. 12ம் வகுப்பு பொதுத் தேர்வை 8.07 லட்சம் மாணவர்களும், 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வை 8.70 லட்சம் மாணவர்களும் எழுத உள்ளனர்.

கணக்குப்பதிவியல் தேர்வுகளுக்கு மாணவர்கள் கால்குலேட்டர் எடுத்துச் செல்லலாம். ஒவ்வொரு தேர்வுக்கும் 3 முதல் 5 நாட்கள் இடைவெளி இருக்கும் வகையில் தேர்வு அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது." எனத் தெரிவித்தார்.

# கோவை மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் மூவரையும் பிடித்தது எப்படி?

## காவல் ஆணையர் விளக்கம்



கோவை: நவ.5-

கோவை பீளமேடு விமான நிலையம் அருகே, கல்லூரி மாணவி நேற்று பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக பீளமேடு போலீஸார் விசாரித்து மூவரை கைது செய்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக கோவை மாநகர காவல் ஆணையர் ஆ.சரவணசுந்தர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "மாணவி வன்கொடுமை வழக்கில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சதீஷ் (எ) கருப்பசாமி, இவரது சகோதரர் கார்த்திக் (எ) காளீஸ்வரன் (21), இவர்களது தூரத்து உறவினர் மதுரை கருப்பாயூரணியை சேர்ந்த குணா (எ) தவசி (20) ஆகிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு 30 நாட்களுக்கு முன்பு மூன்று பேரும் பிணையில் வந்துள்ளனர்.

இவர்கள் மீது கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் கொலை வழக்கு நிலுவையில் உள்ளது. க.க.சாவடி, துடியலூர் காவல் நிலையங்களில் கொள்ளை, வழிப்பறி, அடிதடி உள்ளிட்ட பல வழக்குகள் இவர்கள் மீது உள்ளன. இவர்கள் மரம் வெட்டுதல், லேத் ஒர்க் போன்ற கிடைக்கும் வேலைகளுக்கு சென்று வந்துள்ளனர்.

இவர்கள் கோவில்பாளையம் பகுதியில் சாவியுடன் நின்றிருந்த மொபட்டை திருடி பயன்படுத்தி வந்தனர். சம்பவ நாளில் இருகூர் வீட்டில் மது அருந்திவிட்டு, சம்பவம் நடந்த பகுதிக்கு வந்துள்ளனர். அங்கு காரில் தோழியுடன் பேசிக் கொண்டிருந்த வாலிபரை அரிவாளால் தாக்கி, பெண்ணை இருட்டான பகுதிக்கு 3 பேரும் இழுத்துச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். காயமடைந்த வாலிபர் இரவு 11.20 மணியளவில் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார். 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீஸார் தீவிரமாகத் தேடினர். அங்கு மிகவும் இருட்டாக இருந்ததால் 100 போலீஸார் தேடுதலுக்குப் பின் அதிகாலை நாலு மணி அளவில் நீண்ட தேடுதலுக்கு பின்னர் மாணவி மீட்கப்பட்டார்.

ஏழு தனிப்படைகள் அமைக்கப்பட்டு சம்பவம் நடந்த பகுதி உட்பட பல இடங்களில் 300 சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து, அறிவியல் பூர்வமான ஆதாரங்களை திரட்டி குற்றவாளிகளை தேடியதில், மூவரும் துடியலூர் வெள்ளக்கிணறு பகுதியில் மறைந்திருப்பது தெரியவந்தது. அங்கு சென்ற போலீஸார் மூவரையும் பிடிக்க முயன்றபோது அவர்கள் தாங்கள் வைத்திருந்த ஆயுதங்களால் காவலர்களை தாக்கினர். அரிவாளால் வெட்டியதில் தலைமைக் காவலர் சந்திரசேகருக்கு (47) இடது கையில் வெட்டு விழுந்தது. போலீஸார் சுட்டதில் மூன்று பேருக்கும் காலில் காயம் ஏற்பட்டது. பின்னர் கைது செய்யப்பட்ட மூன்று பேரும் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது 296 (தீ), 118, 140, 309, 80 ஆகிய சட்டப்பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கைதானவர்களிடமிருந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் செல்போன் மோதிரம் மற்றும் ஒரு மொபைல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற ஆபத்தான காலத்தில் போலீஸாரை தொடர்பு கொள்ள காவல் உதவி ஆப் செயல்பட்டு வருகிறது. இந்த ஆப்பில் ஷஷீட பட்டனை அழுத்தினாலோ அல்லது 3 முறை அசைத்தாலோ காவல்துறைக்கு புகார் செல்லும். லொகேஷனை கண்டறிந்து யாரேனும் ஆபத்தில் சிக்கி இருந்தால் மீட்க முடியும். சம்பவ இடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த டாஸ்மாக் பார் மூடப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த பகுதியில் தினமும் 5 பீட் ஆபிசர், இரண்டு ரோந்து வாகனங்கள் தினமும் ரோந்து சுற்றி வருகின்றனர். சம்பவத்துக்கு சற்று முன்பு பிருந்தாவன் நகர் மெயின் ரோட்டில் போலீஸார் ரோந்து சென்றுள்ளனர். மாணவிகளின் பாதுகாப்புக்கு 'போலீஸ் அக்க', மாணவர்களின் பாதுகாப்புக்கு 'போலீஸ் புரோ' திட்டங்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன" இவ்வாறு அவர் கூறினார்.

## விற்பனை விவரம், கணக்கில் செலுத்திய தொகை இடையே மாறுபாடு இருந்தால் பணியாளர்கள் மீது நடவடிக்கை: டாஸ்மாக் நிர்வாகம் எச்சரிக்கை




சென்னை, நவ.05-

மதுபான விற்பனை விவரம், டாஸ்மாக் கணக்கில் செலுத்திய தொகை இடையே மாறுபாடு இருந்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, டாஸ்மாக் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து, டாஸ்மாக் மேலாண் இயக்குநர், மாவட்ட மேலாளர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மதுபானக் கடைகளில் மதுபானங்கள் விற்பனை ரொக்கம், கார்டு மற்றும் யுபிஐ ஆகியவை மூலம் நடைபெறும் நிகழ்வுகளில், மதுபானங்களின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் மட்டுமே அவைகளை விற்பனை செய்து இருக்க வேண்டும்.

இந்த நடைமுறையில் வேறுபாடு நிகழக் கூடாது. ரொக்கம், கார்டு மற்றும் யுபிஐ மூலம் மதுபானங்களின் அதிகபட்ச விற்பனை விலையை விட கூடுதலாக விற்பனை தொகை பெறப்பட்டிருந்தால், பெறப்பட்ட முழு தொகையினையும் அப்படியே டாஸ்மாக் கணக்கில் செலுத்த வேண்டும்.

மதுபானக் கடைகளில் தினந்தோறும் கணினிமயமாக்குதலுக்காக வழங்கப்பட்ட கையடக்க கருவியில் உள்ள ரொக்க விற்பனை மற்றும் கார்டு மூலம் நடைபெற்ற விற்பனையை கடை பணியாளர்கள், வங்கியில் செலுத்திய பணம் மற்றும் கார்டு மூலம் நடைபெற்ற விற்பனை விவரங்களையும் ஒப்பீடு செய்து வேறுபாடு கண்காணிக்க வேண்டும். மேலும், மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் இந்த பணியினை ஒரு இளநிலை உதவியாளருக்கு பணி ஒதுக்கீடு செய்து கண்காணிக்க வேண்டும்.

இதற்காக தனியாக கோப்பு தயார் செய்து மாவட்ட மேலாளருக்கு தினமும் சமர்ப்பிக்க பணிக்க வேண்டும். ரொக்கத்தில் விற்பனை செய்த தொகை முழுவதும் அந்தந்த மதுபானத்துக்கு உரிய அதிகபட்ச சில்லறை விற்பனைத் தொகையில், அதாவது, அவை முழுவதற்கும் உரிய அதிகபட்ச சில்லறை விற்பனை தொகையின் கூட்டுத் தொகையில் எந்த குறைபாடும் இன்றி அடுத்த நாள் வங்கியில் செலுத்தப்பட்டதா என சரிபார்த்து தினசரி உறுதி செய்ய வேண்டும். இதில் குறைபாடு இருப்பின், அதனை விற்பனை தொகை கையாடல் செய்துள்ளதாக முடிவு செய்து அது தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதாவது, குறைவுத் தொகையை முழுவதுமாக வசூல் செய்தல், குறைவுத் தொகை மீது 50 சதவீதம் அபராதத் தொகை வசூல் செய்தல், குறைவுத் தொகை மீது 2 சதவீதம் மாதவட்டி வசூல் செய்தல், அபராத தொகை மற்றும் வட்டித் தொகை மீது ஜிஎஸ்டி வசூல் செய்தல். மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளும் விடுதலின்றி செய்ய வேண்டும்.

இது தொடர்பாக, மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அனைத்து விற்பனைகளின் விற்பனை விவரங்கள் முழுமையாக தொகுத்து கண்காணிக்கப்பட வேண்டும். ஏதேனும் ஒரு கடையில் மாறுபாடுகள் இருப்பின், அந்த கடையினை அன்றைய தினமே முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானாமதுரை கிழக்கு, வடக்கு ஒன்றிய பகுதிகளில் திமுக பாகமுவர்கள் ஆலோசனை கூட்டம் : துரை. இராஜாமணி, அ. முத்துச்சாமி, தமிழரசி, கேஆர்என். போஸ் பங்கேற்பு



மானாமதுரை நவ. 05

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி கிழக்கு மற்றும் வடக்கு ஒன்றியங்களின் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் துரை. இராஜாமணி,

அ. முத்துச்சாமி ஆகியோரது தலைமையிலும் தொகுதி தலைமைக்கழக பார்வையாளர், கழக விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர், குன்றாண்டார்கோவில் யூனியன் முன்னாள் சேர்மன் கே. ஆர். என். போஸ், ஒன்றிய மேனாள் கவுன்சிலர் கொன்னக்குளம் மலைச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வேங்கை சுந்தர் ,வேங்கை பாண்டி , அறங்காவலர் பால்பாண்டி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது...

இதில் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு பாக முகவர்களது களப்பணிகள் பற்றி எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியின்போது துணைச் செயலாளர் பஞ்சவர்ணம் , ஐடி விங் அமைப்பாளர் எஸ்பாலமுருகன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செங்கிஷ்கான் , பரத்குமார் ,உள்ளிட்ட ஏராளமான பாக முகவர்கள், ஒன்றிய மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...




# கோவை சொக்கம்புதூர் பகுதியில் இயங்கிவரும் எஸ்.பி.ஓ. ஏ. மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் 40ம் ஆண்டு விளையாட்டு விழா

கோவை, நவ.05-

கோவை சொக்கம்புதூர் பகுதியில் இயங்கிவரும் எஸ்.பி.ஓ. ஏ. மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் 40ம் ஆண்டு விளையாட்டு விழா வெகுவிமர்சியாக பள்ளியின் தாளாளர் எ .செந்தில் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் எஸ்.பி.ஓ. ஏ.கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர் பி.நிதிஷ் ஆண்ட்ரெயா ராஜா சிங்,கோவை எஸ்.பி.ஓ.ஏ. பள்ளிகளின் தாளாளர் எம் .முருகேசன், பள்ளியின் முதல்வர் சபுரால் பானு இப்ராஹீம் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

ராப்சோடியா ஸ்போர்டிவா என்னும் தலைப்பில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் சிறப்பு விருந்தினராகக் கோவை மாநகரக் காவல் துணை ஆணையர் எம்.பி.திவ்யா, பங்கேற்று தேசியக் கொடியை ஏற்றி, மாணவர்களின் அணிவகுப்பை ஏற்று விளையாட்டு விழாவினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் எஸ்.பி.ஓ.ஏ. கல்வி அறக்கட்டளையின் இணைச் செயலர் சி.லாசர் ஜெயப்பிரகாஷ், பொருளாளர் எஸ்.பிரகாஷ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் எஸ். செல்வக்குமார் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசு வழங்கி சிறப்பித்தனர்

நிகழ்ச்சியை தொடர்ந்து பள்ளியின் உடற்கல்வித்துறை ஆசிரியை ஆர். சந்திரா மாணவர்களுக்கு விளையாட்டு விழா ஆண்டறிக்கையினைச் சமர்ப்பித்தார்.

அதனை தொடர்ந்து பள்ளியின் முன்னாள் மாணவி டாக்டர். எஸ்.சம்யுக்தா விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் முன்னதாக 12ம் வகுப்பு மாணவர்கள் செல்வன். எஸ்.பிரதீப் வரவேற்புரை வழங்கினர்.

நிகழ்ச்சியின் இறுதியில் செல்வி.நிஸ்தா பட்ரா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியை தொடர்ந்து மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது

அதனைத் தொடர்ந்து மாலையில் நடைபெற்ற பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக அறிவியல் விஞ்ஞானி பாரதியார் பல்கலைக் கழகம் டாக்டர் கே.கதிர் வேலு கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். இதில் பன்க சாய்" எனும் தலைப்பில் ஜப்பானியர்களின் பண்பாடு, கலாசாரம் மையப் பொருளாக இடம்பெற்றது.

நிகழ்ச்சியில் மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் பெற்றன.

இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் மாணவ மாணவியரின் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




# தி கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளியில் 16வது ஆண்டு விழா மற்றும் நிறுவனர் தின விழா

கோவை, நவ.05-

கணபதி மணியகாரம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள தி கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளியில், 16 வது பள்ளி ஆண்டு விழா மற்றும் நிறுவனர் தின விழா மிக பிரம்மாண்டமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குனரும் (டிஆர்டிஓ) எஸ்பிக் அமைப்பின் இயக்குனருமான டாக்டர் எம்.மாணிக்கவாசகம் கலந்து கொண்டு மாணவர் களுக்கு ஊக்கமளித்து சிறப்புரையாற்றி சிறப்பித்தார். அதனைத்தொடர்ந்து பள்ளியின் தலைவர் அருள் ரமேஷ், தாளாளர் பூங்கோதை அருள் ரமேஷ்,தலைமை ஆசிரியை பூனம் சியால் ஆகியோர் சிறப்பு விருந்தினருக்கு நினைவு பரிசு வழங்கினர்.

மேலும் 2024 25 கல்வியாண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதலிடம் பெற்றவர்கள் மாணவ மாணவியர்களை பாராட்டினார்.

இந்த நிகழ்வில் இசை, நடனம் மற்றும் நாடகம் உள்ளிட்ட பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றில் பல்வேறு பாணிகள் மற்றும் கருப்பொருள்கள் இடம்பெற்றிருந்தன. பள்ளியின் ராக்பேண்ட் இசைக்குழுவின் மெல்லிசையான குழு நிகழ்ச்சிகள், அற்புதமான அசைவுகளுடன் கூடிய கத்தக். அதிலும் சிறப்பாக நரசிம்மா, ரோமன் போர் வீரர்கள், இந்திய மேற்கு கலப்பு நடனங்கள் என ஒவ்வொன்றும் படைப்பாற்றலை கலாச்சார வெளிப்பாட்டுடன் இருந்தன. மேலும் கேம்ஃபோர்டியன்கள் தி சவுண்ட் ஆஃப் டுரூத் என்னும் சிந்தனையைத் தூண்டும் நாடகத்தின் மூலமாக பார்வையாளர்களைக் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. பிரம்மாண்டமான யூ வி நிகழ்ச்சி பார்வையாளர்களை மயக்கி, பெற்றோர்கள் பாராட்டுகளைப் பெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான 2,313 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், நவ.05-

கடலூர் மாவட்டம், பண்ருட்டி, நெய்வேலி, குறிஞ்சிப்பாடி மற்றும் கடலூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

கடலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 27.10.2025 அன்றைய நிலைப்படி 21,93,577 வாக்காளர்கள் உள்ளனர். 04.11.2025 இன்று முதல் தொடங்கி 04.12.2025 வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கெடுப்பு படிவம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் வழங்கப் பட்டு வருகிறது.

இப்பணிக்காக 151 திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 248, 152விருத்தாசலம் சட்டமன்ற தொகுதிக்கு 288, 153நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்கு 234, 154 பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்கு 259, 155 கடலூர் சட்டமன்ற தொகுதிக்கு 227, 156குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு 259, 157புவனகிரி சட்டமன்ற தொகுதிக்கு 283, 158சிதம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு 260, 159காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதிக்கு 257 என மொத்தம் 2,313 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் 2 படிவங்கள் வழங்கப்படும். மேலும் இப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் போதிய உதவிபுரிவார்கள். வாக்காளர்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு இரண்டு படிவங்களில் ஒன்றினை மட்டும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பித்திட வேண்டும். அவ்வபோது, வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்கள் இல்லத்திற்கு நேரில் வரும் போது வாக்காளர் இல்லாத பட்சத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர் படிவத்தினை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு வழங்கலாம்.

2002 வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் பெயர் இடம்பெறாமல் இருந்தால் கணக்கெடுக்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறவினரின் பெயர், அடையாள அட்டை, உறவு முறை, சட்டமன்ற தொகுதியின் பெயர், பாகம் எண், வரிசை எண் போன்றவற்றை பூர்த்தி செய்திடவும் வழிவகை செய்திட வேண்டும். அச்சமயம் எவ்வித ஆவணமும் இணைத்து வழங்க தேவையில்லை.

அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, வாக்காளர்கள் தங்கள் வீடு தேடி வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், துணை ஆட்சியர் முத்திரைத்தாள் தனலட்சுமி, நெய்வேலி தனித்துணை ஆட்சியர் (நிலஎடுப்பு) வில்சன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் பன்னீர்செல்வம், மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான், நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணராஜன், துணை ஆட்சியர் பயிற்சி கே.டியூக் பார்க்கர் உட்பட பலர் உள்ளனர்.

# வல்லம் ஆர்.சி.மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம்நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, நவ.05-

தென்காசி மாவட்டம் வடகரைகீழ்ப்பிடாகை வட்டாரம் வல்லம் ஆர்.சி. மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 08.11.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல்,, பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே கடந்த மாதம் 17ஆம் தேதிக்கு முன்னர் பெய்த கனமழையால் ராஜ சூடாமணி கிராமத்தைச் சேர்ந்த ஆண்டாள் வயது 65 w/o தியாகராஜன் 70 ஆகியோரது மண் சுவர் இடிந்து விழுந்ததில் அதிர்ஷ்டவசமாக இருவரும் உயிர் தப்பினர் இதனைத் தொடர்ந்து தமிழக அரசு வழங்க வேண்டிய மழைக்காலத்தில் இடிந்த வீடுகளுக்கான நிவாரண நிதியை உடனடியாக வழங்க வேண்டும் எனபாதிக்கப்பட்ட முதியவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்



# பழனியில் மாவட்ட மர வியாபாரிகள் மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் அறிவிப்பு

திண்டுக்கல், நவ.05-

திண்டுக்கல் மாவட்டம் மர வியாபாரிகள் மற்றும் விவசாய சங்க தலைவராக கே.சி. பட்டியை சேர்ந்த ஐயப்பன் என்பவரை சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுத்து சங்கம் சார்பாக பல்வேறு நடவடிக் கைகளை மேற் கொண்டு வருகின்றன.

தொடர்ந்து மர வியாபாரிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் காப்பீடு திட்டம், வைப்புத்தொகை, பாதுகாப்பு நிதி, உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்ட அம்சங்களை தலைவர் தலைமையில் கொண்டு வந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாவட்ட மரவியபாரிகள் மற்றும் விவசாய சங்க செயலாளராக பழனி சிவா மாவட்டத் துணைத் தலைவராக ஜெயராஜ் மாவட்ட இணைச்செயலாளர் முத்துகிருஷ்ணன் ஆகியோரை நியமனம் செய்து அறிவிப்பு செய்தனர்.

தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்தின் கீழ் மர வியாபாரிகள் சங்கம் பல்வேறு சிறப்பு அம்சங்களையும் திட்டங்களையும் செய்துவரும் நிலையில் புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுத்து சங்கத்தை வளர்ச்சி பாதையை நோக்கி கொண்டு செல்வதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளனர்.

இதன் அடிப்படையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட செயலாளர் பழனி சிவா தலைமையில் வியாபாரிகள் மற்றும் பொறுப்பாளர்கள் ஒன்றிணைந்து மாவட்ட தலைவர் கே.சி.பட்டியை சேர்ந்த ஐயப்பனுக்கு மாலை அணிவித்து சால்வை போர்த்தி மதிப்பு செய்தனர். தொடர்ந்து இந்நிகழ்வில் மாவட்ட மர வியாபாரிகள் மற்றும் விவசாய சங்க பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.


# தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தென்காசி, நவ.05-

தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கடன் (டாம்கோ), தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கடன் (டாப்செட்கோ) , மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு கடன் (தாட்கோ) போ ன்ற சிறப்பு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது .

சில்லறை வியாபாரம் மற்றும் வியாபார அபிவிருத்தி, விவசாயம் தொடர்பான சிறு தொழில்கள், கைவினைஞர் மற்றும் மரபுவழி சார்ந்த தொழில்கள் போன்ற பல்வேறு வகையான தொழில்களுக்கு டாம்கோ, டாப்செட்கோ, மற்றும் தாட்கோ கடன்கள் மூலம் குறைந்தபட்சம் ரூ.25,000 முதல் அதிகபட்சம் ரூ.20.00 இலட்சம் வரை கடன் பெறலாம். கடனுக்கான தவணை காலம் 36 முதல் 60 வரை ஆகும்.

18 வயதுக்கு மேற்பட்ட 60 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். டாம்கோ திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் சிறுபான்மையினர் இனத்தை சார்ந்த இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர் மற்றும் சீக்கியர்களாக இருக்க வேண்டும். டாப்செட்கோ திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகவோ (BC) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தை சார்ந்தவராக (MBC) மற்றும் சீர்மரபினர் (DNC) வகுப்பினராக இருக்க வேண்டும். தாட்கோ கடன் பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். தென்காசி மாவட்டத் திலுள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் களிலும் மேலும் மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் மேற்கண்ட கடன்களை தனிநபர் கடன்களாகவோ, சுயஉதவிக்குழு கடன்க ளாகவோ பெற்று கொள்ளலாம். டாம்கோ, டாப்செட்கோ, மற்றும் தாட்கோ கடன் பெறாத, தகுதியுள்ள அனைவரும் கடன் பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அடர்ந்துள்ள முச்சடிகள் தேவையற்ற மரங்கள் ஆகியவற்றை 100 றக்கும் மேற்பட்ட இந்தோ திபெத்தியன் காவல் படை வீரர்கள் ஞிமிநி ஜஸ்டின் ராபர்ட் உத்தரவின் பேரில் சுத்தம் செய்தனர். இந்நிகழ்வினை Assistant commandant அளவேகர் பராசுரம், இன்ஸ்பெக்டர் அன்பு செல்வம் தலைமையில் மேற்கொண்டனர். வளாகத்தினை சுத்தம் செய்த ITBP வீரர்களை கல்லூரி முதல்வர் சீனிவாசன் பாராட்டினார். மேலும் இன் நிகழ்வில் கல்லூரி துணை முதல்வர் விசாலாட்சி, RMO முகமது ரபி, ARMO தென்றல், வெங்கடேசன் மற்றும்அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்

சிவகங்கை, நவ.05-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 314 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.விஜயகுமார் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.அனிஷ் சத்தார் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## “ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை மற்றும் நூலக கட்டிடங்களை” அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார்

மதுரை, நவ.05-

மதுரை மாநகராட்சி பழங்காநத்தம் நாவலர் சோமசுந்தர பாரதியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், நூலக கட்டிடம் மற்றும் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் தமிழக அரசு எண்ணற்ற திட்டங்களை ஏற்படுத்தி அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சிறந்த கல்வியை வழங்கிட பள்ளிக்கல்வித்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், மிதிவண்டிகள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், காலணிகள், இலவச பேருந்து பயண அட்டை மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.74 பழங்காநத்தம் நாவலர் சோமசுந்தர பாரதியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.74.50 லட்சம் மதிப்பீட்டில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், அப்பள்ளி அருகில் ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட நூலகக்கட்டிடம் மற்றும் பழங்காநத்தம், மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் ரூ.71.50 லட்சம் மதிப்பீட்டில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் என மொத்தம் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு இன்று கொண்டுவரப்பட்டது. இதுபோன்ற தமிழக அரசால் வழங்கப்படும் எண்ணற்ற சிறப்பு திட்டங்களை மாணவ, மாணவிகள் நல்லமுறையில் பயன்படுத்தி கல்வியில் சிறந்து வாழ்வில் உயரிய இடத்தை அடைய வேண்டும். அத்தகைய இடத்தை அடைய மாணவர்களுக்கு கல்வி மட்டுமே உறுதுணையாக இருக்கும். மாணவ, மாணவிகள் கல்வியிலும் பிறத்துறைகளிலும் மேன்மை அடைந்திட தேவையான அனைத்து நடவடிக்கை, உட்கட்டமைப்பு வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்தும் என மாணவ, மாணவிகளிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி செயற்பொறியாளர் திருமதி.இந்திராதேவி, மாமன்ற உறுப்பினர் திரு.சுதன், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## குடியாத்தம் அடுத்த நல்லாகவனியூர் ஊராட்சியில் சாலை வசதி வேண்டி மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு

வேலூர். நவ.05-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, நல்லாகவனியூர் ஊராட்சியில், பொதுமக்கள் சார்பில் திங்கட்கிழமை குறை தீர்வு நாள் கூட்டத்தில் சாலை வசதி வேண்டி மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமியிடம் புகார் மனு அளித்தனர். நல்லாகவனியூர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட நல்லாகவனியூர், ரங்கன்பட்டி, ராஜாபுரம், ஏரிகோடி வரை பழுதடைந்த கிராம சாலைகளை ஆய்வு செய்து மேம்படுத்தி தரமான தார் சாலை அமைத்திட கோரிக்கை வைத்துள்ளனர். சுமார் இந்த சாலைகள் வழியாக 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயணித்து வருகின்றனர். பள்ளிக் கல்லூரி மாணவ மாணவியர்கள் முதியவர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பழுதடைந்த சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும், சாலைகள் சீரமைத்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சாலை அமைக்காததால் சாலைகள் பழுதடைந்து பொதுமக்களுக்கு பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளது என தெரிவிக்கின்றனர். அவசரத்திற்கு ஆம்புலன்ஸ் கூட வர வழிவகை யில்லை ஆம்புலன்ஸ் வேகமாக சென்று உயிரை காப்பாற்றும் நிலை முறையான சாலை வசதி இல்லாததால் மருத்துவம் பார்ப்பது கூட கேள்விக்குறியாக உள்ளது, எனவே தரமான தார் சாலை அமைத்து தரும்படி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு வழங்கினர். பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.வேலூர் மாவட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என். மதுசெழியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால் மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சேலம் வாழப்பாடி அருகே பாமக எம்எல்ஏ அருள் சென்ற கார் மீது தாக்குதல்: கண்ணாடி உடைப்பு

சேலம், நவ.05-

வாழப்பாடி அருகே பாமக எம்எல்ஏ அருள் சென்ற கார் மீது மர்ம நபர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் எம்எல்ஏ அருளின் கார் சேதமடைந்தது.

சேலம் மேற்கு தொகுதி பாமக சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் அருள், இவர் ராமதாஸின் தீவிர ஆதரவாளர். இவருக்கும் அன்புமணி ராமதாஸின் ஆதரவாளர்களுக்கும் சேலத்தில் கடுமையான மோதல் நிலவி வருகிறது. அடிக்கடி பாமக எம்எல்ஏ அருள் தொலைபேசி எண்ணுக்கு அன்புமணி ஆதரவாளர்கள் கொலை மிரட்டல் விடுவதும், ஆபாச வார்த்தைகளால் வசைப்பாடுவதும் தொடர்ந்து வருகிறது. இதுகுறித்து, ஏற்கனவே பாமக எம்எல்ஏ அருள், காவல் நிலையத்தில், தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு வழங்க வேண்டும் என புகார் மனுவை அளித்துள்ளார் .

இந்நிலையில், வாழப்பாடியில் உள்ள கட்சியின் நிர்வாகி இல்லத்தில் நிகழ்ந்த இறுதிச் சடங்கில் பங்கேற்று விட்டு, பாமக எம்எல்ஏ அருள் கார் மூலம் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, மர்ம நபர்கள் அருள் சென்ற கார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து அருள் உடன் சென்ற ஆதரவாளர்களும் கல் வீச்சு சம்பவத்தில் ஈடுபட்டனர். பிறகு உருட்டுக்கட்டையால் இருதரப்பினரும் மாறி மாறி தாக்கிக் கொண்டனர்.

இதில் பாமக சட்டமன்ற உறுப்பினர் அருளின் கார் சேதமடைந்தது. காருக்குள்ளே அமர்ந்திருந்த அருளை கட்சி நிர்வாகிகள் பாதுகாத்தனர். பின், தாக்குதல் நடத்திய கும்பல் அங்கிருந்து ஒட்டம் பிடித்தது. இதனைத் தொடர்ந்து, சேலம் எஸ்பி அலுவலகத்தில் பாமக எம்எல்ஏ அருள் புகார் அளித்தார்.



## ஏலகிரி அருகே புதுமனை புகுவிழா முன்னிட்டு செய்தியாளர்கள் வாழ்த்து தெரிவிப்பு

திருப்பத்தூர், நவ.05-

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை தாலுகா, ஏலகிரி மலை பகுதியில் தினகரன் நாளிதழ் செய்தியாளர் ஜெயராணி சிதம்பரம் அவர்களின் புதுமனை புகுவிழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பத்திரிகை சங்க மாவட்ட கவுரவத் தலைவர் குமார், தமிழ் அஞ்சல் ஒருங்கிணைந்த மாவட்ட செய்தியாளரும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான வெங்கடேசன் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாபு, வெங்கடேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

### மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி வார்டு 12ல் ரூபாய் 6.36 கோடி மதிப்பீட்டில்

## பி.கே. மூக்கையா தேவர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று பணிகளை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார்

மதுரை, நவ.05-

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி வார்டு 12ல் ரூபாய் 6.36 கோடி மதிப்பீட்டில் திரு.பி.கே. மூக்கையா தேவர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார்.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்ததாவது, ‘நியாயத்துக்கு ஒரு மூக்கையா’ என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட பி.கே. மூக்கையாதேவர் அவர்களை சிறப்பிக்கும் வகையில் மணிமண்டபம் அமைக்கப்படும் “என்று 03.04.2025 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவை விதி எண்.110ன்கீழ் அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி வார்டு 12ல் திரு. பி.கே. மூக்கையாதேவர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படவுள்ளது. இந்த அரங்கத்தில் அன்னாரின் திருவுருவச்சிலையின் பீடம் 7 அடியாகவும் மற்றும் சிலையின் உயரம் 7 அடியாகவும் அமையப்பெறவுள்ளது. சுமார் 250 நபர்கள் அமரக்கூடிய அரங்கம் மற்றும் 100 நபர்கள் அமரக்கூடிய உணவுக்கூடம் 900 ச.மீ பரப்பளவில் அமையவுள்ளது.

இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்கள் படித்து பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்று மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் மூக்கையாத்தேவர் அவர்களின் முயற்சியால் உசிலம்பட்டி, சங்கரன்கோவில், கமுதி ஆகிய இடங்களில் மூன்று கலைக் கல்லூரிகள் கட்டப்பட்டது. அத்தகைய சிறப்பு வாய்ந்த மூக்கையாத்தேவர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மணிமண்டபம் கட்டி அதன் பின் இந்த பகுதியில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்படுத்திக்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து அரங்கம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மூக்கையாத்தேவர் அவர்கள் மணிமண்டபம் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும் என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், அத்திப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடி, 20 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர் அட்டைகளை வழங்கினார்.

பின்னர் மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், அத்திப்பட்டி கிராமத்தில் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நாடக மேடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தங்கதமிழ்செல்வன் அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.அய்யப்பன் அவர்கள், பொதுப்பணித்துறை (கட்டடம்) தலைமை பொறியாளர் திரு.செல்வராஜன், கண்காணிப்பு பொறியாளர் திரு.செந்தூர் அவர்கள், செயற்பொறியாளர் திரு.ஜோதி லட்சுமண காமராஜ் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு. சந்திரபோஸ் அவர்கள், உதவி பொறியாளர் திரு.கார்த்திக் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## கரூர் வெண்ணெய் மலை பகுதியில் ஆக்கிரமிப்பு கடைகளுக்கு சீல்: மக்கள் போராட்டம்

கரூர், நவ.05-

கரூர் வெண்ணெய் மலை பகுதியில் உள்ள பாலசுப்பிரமணியம் கோயில் நிலத்தில், ஆக்கிரமிப்பு கடைகள் சீல் வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தினர். கரூர் வெண்ணெய் மலை பகுதியில் பாலசுப்பிரமணியம் கோயில் உள்ளது. இந்த கோயிலுக்கு சொந்தமான 547 ஏக்கர் நிலங்களில் பலர் குடியிருப்புகள் கட்டி வசித்து வந்தனர். இது தொடர்பாக திருத்தொண்டர் சபை தலைவர் ராதாகிருஷ்ணன் கடந்த 2019 ஆம் ஆண்டு மதுரை சென்னை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

ஆனால் இது குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடப்பட்டது. இதையடுத்து, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் இப்பகுதியில் உள்ள கடைகளுக்கு சீல் வைக்கும் பணி, கோயில் நிலங்களில் அறிவிப்பு பலகை வைக்கும் பணி நடந்து வருகிறது.

கடந்த வியாழக்கிழமை அப்பகுதியில் ஒரு ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது. இதையடுத்து, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. மேலும், இது தொடர்பான வழக்கு மீண்டும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவிருக்கிறது.

பழைய கரூர்சேலம் சாலையில் வெண்ணைய் மலைப் பகுதியில் உள்ள 4 கடைகளுக்கு சீல் வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை கண்டித்து அப்பகுதியில் உள்ள மக்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அப்பகுதியில் அதிகளவிலான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். போராட்டத்தில் பெண் ஒருவர் மயக்கம் அடைந்தார். அவர் மீட்ட கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். போலீஸார் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.



## வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து துணை முதல்வர் உதயநிதி அனைத்து துறை அலுவலருடன் கலந்தாய்வுக் கூட்டம்

வேலூர், நவ.05-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேலூர் மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர்

இக்கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனம் மற்றும் மாவட்ட காவல் படையினரின் பலத்த பாதுகாப்புடன் இக்கூட்டம் நடைபெற்றது. இதில் வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த், வேலூர் எம்.எல்.ஏ கார்த்திகேயன், அணைக்கட்டு எம்.எல்.ஏ நந்தகுமார், ஆற்காடு எம்.எல்.ஏ ஈஸ்வரப்பன், ஆம்பூர் எம்.எல்.ஏ. வில்வநாதன், வேலூர் மாநகர மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன், வேலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர்கள் பி.ஆர்.ஓ கதிரவன், ஏ.பி.ஆர்.ஓ நந்தகுமார் உட்பட அரசு அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்

இந்த ஆலோசனைக் கூட்டம் முடிந்த பின்பு மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் இருந்து கீழே வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நரிக்குறவர் பெண் மணி மாலை அணிவித்தார்

பள்ளி சிறுமி ஒருவர் துணை முதல்வர் உடன் செல்பி எடுத்துக் கொண்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்க மறுத்து விட்டு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.





## கீழக்கோட்டையில் புகையிலை இல்லா இளைய சமுதாயத்தினை உருவாக்கும் உறுதிமொழி ஏற்பு கருத்தரங்கம்

காளையார்கோவில், நவ.05-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் புகையிலை இல்லா இளைய சமுதாயம் இயக்கம் சார்பாக விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் அனைவரையும் வரவேற்றார். பாகனேரி ஆரம்ப சுகாதார நிலையத்தின் சுகாதார ஆய்வாளர் சரத்குமார் மாணவர்களின் தன் சுத்தம் உணவு பழக்கவழக்கங்கள் குறித்தும் சமுகத்தில் பயன்பாட்டிலுள்ள தீய பழக்கவழக்கங்கள் குறித்தும் புகையிலை இல்லா இளைய சமுதாயமாக மாற தீமை விளைவிக்கும் அனைத்திலிருந்தும் விடுபட்டு கல்வி கற்பதில் எவ்வாறு ஆர்வம் கொள்ளவேண்டும் என்று சிறப்பாக எடுத்துரைத்தார். கொசு புழு ஒழிப்பு பணியாளர் ராஜா புகையிலை இல்லா சமுதாயம் படைப்பதற்கான உறுதிமொழி கூற ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். டெங்கு காய்ச்சல் குறித்து தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. ஆசிரியை வாசுகி மீனாட்சி கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் விண்ணரசன் மேரி வாழ்த்துரை வழங்கினர். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார்.





## சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகம் சார்பில் பாக முகவர்கள் (SIR)ஆலோசனை கூட்டம்

மடிப்பாக்கம், நவ.05-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகம் சார்பில் வட்டக் கழக நிர்வா கிகள் பாகம் முகவர்கள் (SIR) ஆலோசனைக் கூட்டம் மடிப்பாக்கத்தில் நடைபெற்றது. சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர்., 14 வது மண்டல குழு தலைவருமான., பெருங்குடி, எஸ். வி.ரவிச்சந்திரன் தலைமையில் 188 வது மாமன்ற உறுப்பினர்.,மடிப்பாக்கம், சாமீனா செல்வம் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்., நா. சந்திரபாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் 188,187 ஆகிய வட்டங்களின் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ரூபாய் 6.36 கோடி மதிப்பீட்டில் திரு.பி.கே.மூக்கையா தேவர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவின் குமா இ.ஆ.ப. அவர்கள். தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கத்தமிழ் செல்வன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.மு.பூமிநாதன் (மதுரை தெற்கு) அவர்கள், திரு.பி.அய்யப்பன் (உசிலம்பட்டி) அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## ஆழ்வார் ஆச்சார்யா மந்திர் ஜெகதாச்சார்யா 1000 மெமரபல் சபா சார்பாக திருவள்ளூர் மாவட்டத்தில் அமைகிறது





சென்னை, நவ.05-

சென்னை அருகிலுள்ள திருவள்ளூர் மாவட்டம் மணவூர் இரயில் நிலையம் அடுத்த திருவாலங்காடு அருகில் உள்ள பழையனூர் கிராமத்தில் 12 ஆழ்வார்களுடன் திருக்கோயில் கட்டும் பணி ஜகதாச்சார்யா1000 மெமரபல் சபா சார்பாக தொடங்கப்பட்டது சபாவின் ஸ்தாபகர்கள் திரு.ஊசூரு நந்தகுமார் திருமதி .ஊசூரு லதா அவர்கள் செய்தியாளரிடம் கூறியது உலகத்திலேயே முதல் முறையாக 12 ஆழ்வார்கள் நான்கு கோயில் திருமலா பெருமாள்கள் மற்றும் ஆச்சார்யர் ராமானுஜர், மணவாள மாமுனிகள், பரமபத வாசல் சன்னதியோடு 19 சன்னதிகளுடன் கூடிய திவ்யதேசமாக "ஆழ்வார் ஆச்சாரியார் மந்திரம்" இங்கு அமைகிறது என தெரிவித்தார்

03.11.2025ம் தேதி திங்கட்கிழமை திரியோதசி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் சித்த யோகம் கூடிய சுப தினத்தில் காலை 09.09 மணிக்கு மேல் 10.10 மணிக்குள் தனுசு லக்னத்தில் சன்னதிகள் கட்டுமான பணி ஸ்தபதி திரு.S. சந்தான கிருஷ்ணன், திரு.S.சிவக்குமார் அவர்கள் மிக சிறப்பாக நடத்தி வைத்தார்கள். அறங்காவலர் திரு.கண்டசாலா பாலாஜி பிரசாத், கட்டிட கலை நிபுணர் திரு.இளம்பெரியார், கும்மிடிப் பூண்டியை சேர்ந்த திரு.ரங்கா ஆனந்தம் செட்டியார் மற்றும் திருமதி. ஸ்ரீலேகா திரு.கார்த்திக் ,திரு. மாதவன், திருமதி.வட்சலா, திருமதி. ஸ்ரீ லட்சுமி திருமதி.ஆஷாராணி,திரு. முரளி,திரு.எத்திராஜ் சம்பத்குமார், திரு.கோபிநாத், திரு.ராமபிரசாத், திரு.வையாபுரி குடும்பத்தினர் விழாவில் கலந்து கொண்டார்கள்.விஸ்வாஸ் குரூப் திரு.ராமன் தலை மையில் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் நடந்தது.மணவூரை சேர்ந்த திரு.மோகனகிருக்ஷ்ணன் தலைமையில் ஹோமம் நடத்தப்பட்டது.விழா ஏற்பாடுகளை ஜகதாச்சார்யா 1000மெமரபல் சபா ஸ்தாபகர்கள் திரு.ஊசூரு நந்தகுமார், திருமதி. ஊசூரு லதா அவர்கள் மிக சிறப்பாக ஏற்பாடு செய்தார்கள். திருக்கோவில் பணிகள் செய்வதை வாழ்க்கையில் லட்சியமாக கொண்டுள்ளார்கள் பல்வேறு கோவில்களுக்கு திருப்பணிகள் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டார்

தேனி, நவ.05-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் அன்று (03.11.2025) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிக்களுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் மேற்கொள்ள 1,394 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (Booth Level Officer - BLO) ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் மேற்கொள்வது குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிட்டுள்ளபடி 04.11.2025 முதல் 04.12.2025 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இல்லம் தோறும் சென்று, கணக்கெடுப்புப் படிவம் அனைத்து வாக்காளர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட வாக்காளர்களால் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், அதனை திரும்ப பெற்று அப்படிவங்கள் கணினியில் பதிவேற்றம் செய்து வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் வட்டாட்சியர் .ஜாஹிர் உசேன் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 100 பி.வ, மி.பி.வ மற்றும் சீ.ம. மாணவ,மாணவியர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியை மேற்கொள்வதற்காக கடன் வழங்கும் திட்டம்;

கடனுக்கான தகுதி மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சான்றுகள் :

1.விண்ணப்பத்தாரர் பிற்படுத்தப்பட்டோர் ஃ மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஃ சீர்மரபினர் வகுப்பினராக இருத்தல் வேண்டும் (சாதிச் சான்றிதழ்). 2.குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (கிராமம் ஃ நகர்ப்புறம் பாகுபாடின்றி) (வருமானச் சான்றிதழ்). அ.மாநில அரசின் வருமானச் சான்றிதழ் வழங்கும் தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்டிருக்க வேண்டும் (அல்லது), ஆ.வர்த்தமானி பதிவு பெற்ற அதிகாரியால் (புயணயவவநன ழுககவீஉநச) சான்றளிக்கப்பட்ட சுய சான்றளிக்கப்பட்ட ஆண்டு குடும்ப வருமானச் சான்றிதழ், 3.விண்ணப்பதாரர் மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல் படிப்புகள், பிஎச்டி, முதுகலை பட்டப்படிப்புகள் போன்றவற்றில் முதுகலைப் படிப்புகளுக்கு, பொருத்தமான அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட தேர்வு மதிப்பெண்கள் SAT, GMAT, GRE அல்லது பாடநெறியில் சேருவதற்குப் பொருந்தக்கூடிய பிற தொடர்புடைய மதிப்பெண்கள் போன்றவை) மூலம் சேர்க்கையை ஏற்றுக்கொள்ளும் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றிருக்க வேண்டும் (சம்மந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து சேர்க்கை ஃ சலுகை கடிதத்தை பெற்றிருக்கவேண்டும்) (IELTS அல்லது TOEFL போன்ற முற்றிலும் மொழித்திறன் தேர்வை அடிப்படையாகக் கொண்டதல்ல).

நிதியின் அளவு: ஒரு மாணவருக்கு அதிகபட்சக் கடன் வரம்பு ரூ.15,00,000 க்கு உட்பட்ட பாடத்திட்டத்தின் செலவில் 85% புதுதில்லியின் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் மீதமுள்ள 15% அதாவது ரூ.2.25 இலட்சம் தமிழ்நாடு அரசால் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

நிபந்தனைகள்: 1.கடன் தொகையானது சேர்க்கைக் கட்டணம், கல்விக் கட்டணம், புத்தகங்கள், எழுதுபொருட்கள், தேர்வு, ஆய்வகம் மற்றும் நூலகக் கட்டணம் உண்டி மற்றும் உறையுள் கட்டணங்கள் மற்றும் கடன் காலத்திற்கான காப்பீட்டு கட்டணங்கள் உள்ளடக்கியது. 2.கல்வி நிறுவனத்திற்கு செலுத்தப்படட்ட கட்டணத்தின் அடிப்படையில் கடன் தொகை விடுவிக்கப்படும் (செமஸ்டர் அல்லது அரையாண்டு அடிப்படையில்), 3.முந்தைய ஆண்டுகளில் தேர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் மட்டுமே தொடர்ந்து கட்டணத் தவணைகள் விடுவிக்கப்படும், 4.வயது வரம்பு 21 முதல் 40 வரை.

வட்டி விகிதம் : வட்டி விகிதம் ஆண்டிற்கு 8ூ .

கடனை மீள பெறுவதற்கான கால அவகாசம் : கடன்கள் வழங்கப்படும் பாடத்தின் வகை மற்றும் காலத்தைப் பொருட்படுத்தாமல் மாணவர்களிடமிருந்து மீளப்பெறுவதற்கான தடைக்காலம் 5 ஆண்டுகளாக ஒரே மாதிரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடனை திரும்ப செலுத்தும் காலம் : மாணவர்களிடமிருந்து அதிகபட்சமாக மீட்கும் காலம் 10 ஆண்டுகள் ஆகும், அதாவது 5 வருட தடைகாலம் உட்பட, அதாவது கடன் வழங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் கடனை முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

முன்கூட்டியே செலுத்தப்படும் கடன் : கடனை திருப்பிச் செலுத்தத் தொடங்கிய பிறகு, எப்போது வேண்டுமானாலும் கடனைத் திருப்பிச் செலுத்தலாம். இதற்கான முன் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. விண்ணப்பப் படிவம் இக்கழக இணையதள முகவரியில் ; (www. tabcedco.tn.gov.in பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் கடன் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து வங்கி கோரும் ஆவண நகல்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் சமர்பிக்க வேண்டும்.

எனவே, இம்மாவட்டத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் கல்விக் கடன் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161